# கல்பிட்டிய பிரதேச சபை

## புத்தளம் மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 27 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 30 திகதியும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கல்பிட்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

(அ) குப்பை முகாமைத்துவ நிலையத்திற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 225,000 தொகை பெறுமதியான சேதனப் பசளை தகர்க்கும் இயந்திரத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) முன்வரும் காலத்திற்காக செலுத்தியிருந்த ரூபா 11,154 தொகையினை கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) JB-2770 இலக்கம் கொண்ட டிரக்டர் வண்டியின் மற்றும் LE-9727 இலக்கம் கொண்ட லொறி வண்டியின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் அடங்கியுள்ள சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் 23 அலகுகளின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) உள்ளுராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து கிடைக்க வேண்டிய மூலதன உதவி ரூபா 5,000,000 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் வருமானக் கடன்பட்டோர் மற்றும் மூலதன உதவி அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

--------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் காணப்படும் கணக்கு விடய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31,147,963 தொகை எனினும் அவற்றுடன் தொடர்புடைய பட்டோலைகளின் பிரகாரம் அம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 30,958,340 ஆகக் காணப்படாமையால் ரூபா 189,623 இற்கான தேறிய வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 45,184,022 ஆகக் காணப்பட்டதுடன் அத் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 40,714,817 ஆகும். அவற்றில் ஒரு வருட காலத்தை மிகைத்த காலம் முதல் காணப்படும் பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,812,893 ஆக காணப்பட்டதுடன், 03 வருடங்களை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,403,405 தொகையாகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

08 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 85,930,400 இற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அவற்கை திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

--------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 129(2)(அ) மற்றும் (ஊ) இன் பிரகாரம் பிரதேச சபைக்க கிடைக்க வேண்டிய அனைத்து வீத வரி, குத்தகை, அனுமதிப்பத்திரக் கட்டணம், நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 45,194,021 தொகையினை முறைப்படி அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. அத்துடன் சட்டத்தின் பிரிவு 134 இன் பிரகாரம் பிரதேச சபைகளின் ஒரே வளத்திற்காக வீத வரி நூற்று வீதம் 2 விதிக்க முடியாது. எனினும் சபையினால் ஒரே வலயத்தில் அமைந்திருக்கும் வீடுகளுக்காக நூற்றிற்கு 9 உம் மற்றும் வர்த்தக நிலையங்கள் நூற்றிற்கு 12 வீதம் வீதவரி விதிக்கப்பட்டிருந்தது. அதே போல் சட்டத்தின் பிரிவு 150(4) இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களின் அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தத் தவறும் நபர்கள் தொடர்பாக தேவையான சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் சட்டத்தின் பிரிவு 158 பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீத வரி மற்றும் ஏக்கர் வரி செலுத்தத் தவறும் நபர்களுக்கு சொந்தமான அசையும் ஆதனங்களைத் தடைசெய்து நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான சொத்துக்களை எல்லா ஆண்டுகளினதும் இறுதியிலும் கணிப்பீடு மேற்கொண்டு அறிக்கை தயாரித்திருக்கவில்லை.

(இ) சபையின் வைப்புச் செய்திருந்த 2 வருடங்களை விஞ்சிய ரூபா 5,726,734 பெறுமதியான 818 வைப்புக்களை இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 571 இன் பிரகாரம் வருமானத்திற்கு எடுப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 1996 இன் 34 ஆம் இலக்க பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் பிரகாரம் பல வருட காலமாக அறவீடு செய்திருந்த பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி ரூபா 289,387 தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(உ) 2002 ஜூன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் பிரகாரம் 2010, 2011 மற்றும் 2012 ஆண்டுகளின் 4வது காலாண்டு மற்றும் 2013 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டு தொடர்பாக பெறுமதி சேர் வரி என அறவிடப்பட்டிருந்த ரூபா 4,326,351 இற்கான தொகையொன்று உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2009 இன் 09 இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின் பிரகாரம் 2011 ஆண்டிற்கு முன்னர் மற்றும் 2012 மற்றும் 2013 ஆண்டுகளின் போது சேகரிக்கப்பட்டிருந்த தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 53,221 தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

-----------------------

### 2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 8,991,395 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,006,144 ஆகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது முறையே ரூபா 48,484,620 உம் மற்றும் ரூபா 4,226,054 இற்கான மூலதன உதவி மற்றும் முறையே ரூபா 43,995,821 உம் மற்றும் ரூபா 13,456,424 இற்கான மூலதன செலவுகளை கணித்த பின்னர் ரூபா 13,480,194 இற்கான மிகையொன்றும் ஏற்பட்டிருந்தது. அத்துடன் முன்னைய ஆண்டின் ரூபா 8,224,226 இற்கான பற்றாக்குறை ஒன்று ஏற்பட்டிருந்தது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 21,704,420 இற்கான முன்னேற்றமொன்று ஏற்பட்டிருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

-----------------------------------

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

-----------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2014 மதிப்பிடப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை | 2013 மதிப்பிடப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 2,765 | 2,728 | 8,159 | 2,910 | 335 | 6,216 |
| வாடகை | 7,032 | 5,189 | 8,760 | 5,515 | 4,000 | 9,111 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 27,775 | 19,334 | 74 | 2,007 | 2,029 | 81 |
| ஏனைய வருமானங்கள் | 3,362 | 1,877 | - | 16,560 | 10,288 | 7,472 |

2.2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் மீண்டுவரும் செலவுக்காக ஒதுக்கியிருந்த தொகையில் நூற்றிற்கு 32 இனையும் பயன்படுத்தியிருக்கவில்லை. அத்துடன், ரூபா 101 மில்லியனுக்கான மொத்த மூலதன செலவுகளிலும் பயன்படுத்தியிருந்தது. ரூபா 44 மில்லியன் எனப்படும் நூற்றிற்கு 44 மாத்திரமாகும்.

2.2.3 வீத வரி

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி ரூபா 6,216,006 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான பில் போடப்பட்டவை ரூபா 2,619,202 தொகையாகக் காணப்பட்டமையால் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 8,835,208 ஆகும். அவற்றில் ரூபா 1,557,475 தொகை மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அதனை சதவீதமாக எடுத்தால் நூற்றிற்கு 18 ஆகும். மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவைத் தொகை ரூபா 7,277,733 ஆகும்.

2.2.4 வாடகை

2014 ஜனவரி 01 திகதி நிலுவை வாடகை ரூபா 7,996,342 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது பில்போடப்பட்ட ரூபா 5,101,870 தொகை ஆகக் காணப்பட்டமையால் அறவிடபபட வேண்டிய தொகை ரூபா 13,038,212 ஆகும். அவற்றில் மீளாய்வாண்டின் போது ரூபா 4,337,794 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதனை சதவீதமாக எடுத்தால் நூற்றிற்கு 33 ஆகும்.

2.2.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதி மன்று ஒன்றினால் அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 2,930,298 இற்கான நீதி மன்றத் தண்டப் பணம் சபைக்கு அறவிடப்பட வேண்டி காணப்பட்டதுடன் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாகாண பிரதான செயலாளரினால் பதிவாளர்

நாயகத்திடம் அறவிடப்பட்ட ரூபா 12,960,860 இற்கான முத்திரைக் கட்டணம் சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,719,189 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 06 வருட காலத்திற்கு முன்னர் ஓய்வு பெற்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 64 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 141,361 தொகையும் காணப்பட்டது.

(ஆ) செயலாளர் பதவி பல வருட காலமாக வெற்றிடமாக காணப்பட்டதுடன், இரண்டாம் மற்றும் ஆரம்ப தரங்களின் 29 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. ஆரம்ப தரங்களின் பதவிகளில் கடமைகளுக்காக 71 பேர்கள் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 397,124 இற்கான முற்பணத்தை தீர்த்திருக்கவில்லை. அத்துடன் அவற்றில் 2 வருடங்களை மிகைத்த முற்பணங்களின் பெறுமதி ரூபா 278,696 ஆகும்.

### 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

---

கூட்டுத்தொகை ரூபா 1,469,515 பெறுமதியான 04 சொத்து விடயங்களும் பெறுமதி மதிப்பிடப்படாத 03 சொத்துக்கள் விடயங்களும் பல வருட காலமாக பயன்படுத்தப்படாமலும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டது.

### 3.3 அகக் கணக்காய்வு

---

பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி இலக்கம் 5(7) இன் பிரகாரம் நிதி மற்றும் களஞ்சிய விடயங்கள் தொடர்பாக போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்